**செய்தி வெளியீடு எண்.884** **நாள்.21.10.2008**

# பத்திரிக்கைச் செய்தி

அரசு இரப்பர் கழகத் தொழிலாளர்களின் தினசரி ஊதியம் மற்றும் இதர படிகளை, 1.12.2007 முதல் முன்தேதியிட்டு உயர்த்தி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். தொழிற்சங்கங்களுடனான பேச்சு வார்த்தை மற்றும் சமரச நடவடிக்கைகளுக்குப் பிறகு, 1.12.2007 முதல் 30.11.2010 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு அரசு இரப்பர் கழகத் தொழிலாளர்களின் தினக்கூலி மற்றும் பிற படிகளை திருத்தியபடி வழங்க ஒரு புதிய ஊதிய ஒப்பந்தம் ஏற்படுத்த அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

இந்த ஊதிய ஒப்பந்தத்தினால் அரசு இரப்பர் கழகத்தின் 1821 தொழிலாளர்கள் பயனுறுவர். இவ்வாறு திருத்தி அமைக்கப்பட உள்ள ஊதியத்தின்படி இன்றைய தேதியில் அரசு இரப்பர் கழக தொழிலாளர்களில் பால் வடிப்பாளர்கள் நாளொன்றுக்கு ரூ.104.65 அடிப்படை ஊதியமும், ரூ.37.05 அகவிலைப்படியும் ஆக மொத்தம் ரூ.141.70 ஊதியமாகப் பெறுவர். அதே போன்று களப்பணியாளர்கள் மற்றும் பாதுகாப்புப் பணியாளர்கள் ரூ.95/– அடிப்படை ஊதியமும் ரூ.37.05 அகவிலைப்படியும் ஆக மொத்தம் ரூ.132.05 ம், தொழிற்கூடத் தொழிலாளர்கள் ரூ.100/– அடிப்படை ஊதியமும், ரூ.37.05 அகவிலைப்படியும் ஆக மொத்தம் ரூ.137.05 ஊதியமாகப் பெறுவார்கள்.

இதன்படி மேற்கண்ட தொழிலாளர்களுக்கு அடிப்படை ஊதியத்தில் நாளொன்றுக்கு குறைந்தபட்ச ஊதிய உயர்வாக ரூ. 18.65 –ம் அதிகபட்ச ஊதிய உயர்வாக ரூ.21.30–ம் கிடைக்கும் மேலும் பண்டிகை முன்பணம் ரூ.1,500–லிருந்து ரூ.3,000 என உயர்த்தி வழங்கவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. இப்புதிய ஊதிய ஒப்பந்தம் மேற்கொள்வதன் மூலம் அரசு இரப்பர் கழகத்துக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1.48 கோடி (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தியெட்டு இலட்சங்கள் மட்டும்) கூடுதல் செலவினம் ஏற்படும்.

ஒப்பம்/–
( ந.சுந்தரதேவன் )
முதன்மைச் செயலாளர்,
சுற்றுச்சூழல் – வனத்துறை

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.